## தலைப்பு 303 – புடவைக் கைத்தொழில் திணைக்களம்

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

புடவைக் கைத்தொழில் திணைக்களத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் புடவைக் கைத்தொழில் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2021 ஆகஸ்ட் 13 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2021 ஒக்டோபர் 21 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான புடவைக் கைத்தொழில் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் / கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது எனவும்,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருந்தது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதிக்கூற்றுக்கள் சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்காமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அரச கணக்குகள் திணைக்களத்தினால் விநியோகிக்கப்பட்ட வழிகாட்டி இலக்கம் 06 இன் பிரகாரம் நிதிச் செயலாற்றல் கூற்றில் திறைசேரி கட்டுநிதியை காண்பிக்கும் போது திறைசேரியில் இருந்து கிடைத்த அளவும் மற்றும் ஏனைய வருமானங்களும் கணக்கீட்டு உத்தியோகத்தர்களுக்காக மேற்கொள்ளப்பட்ட ஒன்றுசேர்த்தல்கள் தனித்தனியாக காண்பிக்கப்பட வேண்டும். அவ்வாறே ஒன்றிணைந்த பரீட்சை மீதியின் பிரகாரம் ரூபா 193,320,778 தொகையான கட்டுநிதி பெறுவனவு தொகை மற்றும் ஏனைய வருமானங்கள் கணக்கீட்டு உத்தியோகத்தர்களுக்காக பெறப்பட்ட ரூபா 13,233,652 தொகை என்ற இரண்டு | நிதி செயலாற்றல் கூற்றில் தவறுதலாக அது கட்டுநிதி பெறுவனவுகளின் கீழ் பதியப்பட்டுள்ளது. | வழிகாட்டியின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். உத்தியோகத்தர்களுக்காக மேற்கொள்ளப்பட்ட ஒன்றுசேர்த்தல்கள் தனித்தனியாக காண்பிக்கப்பட வேண்டும். |

பெறுமதிகளும் ஒன்சேர்க்கப்பட்டு ரூபா 206,554,430 ஆக காண்பிக்கப்பட்டிருந்தது.

**1.6.2 காசுப் பாய்ச்சல் கூற்று**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) ஏனைய வருமானங்கள் கணக்கீட்டு உத்தியோகத்தர்களுக்காக மேற்கொள்ளப்பட்ட சேர்த்தல்கள் காசுப் பாய்ச்சல் கூற்றில் செயற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்து உருவாக காசுப் பாய்ச்சலின் கீழ் காண்பிக்கப்பட வேண்டிய போதிலும், ரூபா 13,233,652 தொகையான அந்த பெறுவனவுகள் திறைசேரி கட்டுநிதியில் சேர்த்து காண்பிக்கப்பட்டிருந்தது. | தவறுதலாக காசுப் பாய்ச்சல் கூற்றில் கட்டுநிதி பெறுவனவாக சேர்க்கப்பட்டிருந்ததாக அறிவிக்கப்பட்டிருந்தது. | ஏனைய வருமானங்கள் கணக்கீட்டு உத்தியோகத்தர்களுக்காக மேற்கொள்ளப்பட்ட சேர்த்தல்கள் காசுப் பாய்ச்சல் கூற்றில் செயற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்து உருவாக காசுப் பாய்ச்சலின் கீழ் தனியாக காண்பிக்கப்பட வேண்டும். |
| (ஆ) ஒன்றிணைந்த பரீட்சை மீதியின் பிரகாரம் திணைக்களத்தினால் ஏனைய செலவின தலைப்புகளுக்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 9,494,124 தொகை, காசுப் பாய்ச்சல் கூற்றில் ரூபா 9,326,196 ஆக ரூபா 167,928 தொகை குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | ஏனைய அமைச்சுக்கள், திணைக்களங்களுக்காகவும் மற்றும் ஏனைய பிரதான பேரேட்டின் கீழ் 2020 ஆம் ஆண்டில் இத்திணைக்களத்தினால் செலவிடப்பட்ட ரூபா 10,418,164 தொகை மற்றும் செலவின தலைப்பின் மூலம் 2020 ஆம் ஆண்டில் இத்திணைக்களத்திற்காகவும் மற்றும் ஏனைய பிரதான பேரேட்டின் கீழும் செலவிடப்பட்ட ரூபா 1,031,968 தொகையில் தேறிய வேறுபாடு காசுப் பாய்ச்சல் கூற்றில் | வழிகாட்டியின் இலக்கம் 06 இன் பிரகாரம் காசுப் பாய்ச்சல் கூற்றில் ஏனைய செலவின தலைப்புகளுக்காக செலவிடப்பட்ட சரியான பெறுமதி காண்பிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | ரூபா 9,326,196 தொகையான பதியப்பட்டிருந்ததது. அதன் பிரகாரம் கணக்கு செய்யப்பட்ட பெறுமதி சரியானதாகும். | |
| (இ) | திணைக்களத்தின் பரீட்சை மீதியின் பிரகாரம் முற்பண அறவிடல்கள் ரூபா 4,167,987 தொகை மற்றும் செலுத்துகைகள் ரூபா 6,128,737 ஆக காசுப் பாய்ச்சல் கூற்றில் காண்பிக்கப்பட வேண்டிய போதிலும், அது முறையே ரூபா 3,929,034 தொகை மற்றும் ரூபா 5,969,973 ஆக அதாவது திறைசேரி அட்டவணை இலக்கம் SA-52 இல் குறிப்பிடப்பட்ட மீதியை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டிருந்தது. | அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பண கணக்கு தொடர்பாக கணக்காய்வினால் சுட்டிக் காட்டப்பட்டுள்ள மீதிகளினதும் திணைக்களத்தின் நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்ட மீதிகளினதும் இணக்கத்தின் பிரகாரம் இத்திணைக்களத்தினால் கணக்கீடு செய்யப்பட்ட பெறுமதி சரியானதாகும். | காசுப் பாய்ச்சல் கூற்றில் முற்பண அறவிடல்கள் மற்றும் செலுத்துகைகள் ஒன்றிணைந்த பரீட்சை மீதியை அடிப்படையகாகக் கொண்டு காண்பிக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 303-2-1-1-2001 ஆம் இலக்க செலவின தலைப்பிற்கு ஒதுக்கப்பட்ட ரூபா 3,000,000 மொத்த தேறிய ஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது. | 2020 ஆம் ஆண்டின் இடைக்கால அங்கீகரிக்கப்பட்ட நான்கு கணக்குகளின் கீழ் நிதிஏற்பாடு வழங்குதல், காணப்பட்ட கொவிட் - 19 நிலைமையின் காரணமாக நாட்டின் அநேகமான பிரதேசங்கள் முடக்கப்பட்ட பிரதேசங்களாக அவ்வப் போது பெயரிடப்பட்டமை மற்றும் தபால் நடவடிக்கைகள் | நிதிஏற்பாடு செய்யப்பட்ட பணத்தை செயற்திறனாக பயன்படுத்துதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | தொடர்ச்சியாக செயற்படுத்தப்படாமை போன்ற காரணங்களினால் 2001 இன் செலவின தலைப்பின் கீழ் கட்டிடங்களை பராமரிப்பதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்காக கூறுவிலை கோரும் இயலுமை காணப்படவில்லை. | |

**2.2 முற்பணங்களை வழங்குதலும் தீர்த்தலும்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2004 ஒக்டோபர் 11 ஆம் திகதிய 18 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் 1.1.7 ஆம் பந்தியின் பிரகாரம் உத்தியோகத்தர் ஒருவர் ஏனைய திணைக்களத்திற்கு இடம்மாற்றலாகிச் சென்றமையினால் ஏற்பட்டிருந்த கடன்பட்டோர் மீதி மூன்று மாதங்களுள் தீர்க்கப்பட வேண்டியிருந்த போதிலும், அவ்வாறு தீர்க்கப்படாத மீதி ரூபா 173,000 ஆகும். | இடம்மற்றலாகிச் சென்ற உத்தியோகத்தரின் கடன்பட்டோர் மீதி தீர்க்கப்படாமை தொடர்பாக எழுத்து மூலம் கோரப்பட்டிருந்த போதிலும், இது வரையிலும் தீர்த்து வைக்கப்படாமையினால் மீண்டும் மீள் நினைவூட்டல் கடிதம் அந்த நிறுவனத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதுடன், விரைவாக அந்த கடனை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திணைக்களத்தினால் பயன்படுத்தப்படுகின்ற 05 கட்டிடங்கள் | புடவை பாடசாலை அமைந்துள்ள காணியை தீர்த்து வைக்குமாறு உரிய | காணிகளின் உரித்தை தீர்த்து வைத்து கட்டிடங்கள் |

| | | |
|---|---|---|
| நிர்மாணிக்கப்பட்ட காணிகளின் உரித்து தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை. | பிரதேச செயலகங்களுக்கும், மாத்தளை புடவை பாடசாலை அமைந்துள்ள காணியை விடுவிக்குமாறு மாவட்ட காணி மறுசீரமைப்பு அதிகார சபை மாத்தளைக்கும் கோரிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | நிர்மாணிக்கப்பட வேண்டும். |

## 3.2 முகாமைத்துவ நலிவுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 05 செயற்திட்டங்களுக்காக மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 17,018,250 தொகையான வாடகை நிலுவையாக காணப்பட்டது. அந்த நிலுவை வாடகையை அறவிடல் தொடர்பாக சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்ட போதிலும், அதன் செயல்முன்னேற்றம் தொடர்பாக பின்தொடர் நடவடிக்கைகள் செய்யப்பட்டிருக்கவில்லை. | உரிய கடிதம் சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதுடன், மிகுதி நடவடிக்கைகள் அந்த நிறுவனத்தின் மூலம் மேற்கொள்ளப்படும். | நிலுவை வாடகையை அறவிடுவதற்குரிய நடவடிக்கைகளின் செயல்முன்னேற்றம் தொடர்பாக பின்தொடர் நடவடிக்கைகளைச் செய்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.3 தீர்வு காணப்படாதுள்ள கணக்காய்வு பந்திகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2017 ஆம் ஆண்டின் போது கிராம உத்தியோகத்தர் பிரிவு மட்டத்தில் நாடளாவிய ரீதியில் உள்ள புடவைக் கைத்தொழில் புள்ளி விபரங்களுக்கான விரிவான தரவுகளை சேகரித்தல் இரண்டு கட்டங்களின் கீழ் ஆரம்பிக்கப்பட்டது. தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் மற்றும் புடவைக் கைத்தொழில் திணைக்களம், மாவட்ட செயலகங்கள் ஒன்றிணைந்து மேற்கொள்ளப்பட்ட இந்த புள்ளிவிபரங்களுக்காக ரூபா 16 மில்லியன் செலவின மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன், | 2020, 2021 ஆம் ஆண்டுகளின் பாதீட்டு மதிப்பீட்டின் மூலம் நிதிஏற்பாடு கோரப்பட்ட போதிலும் உரிய நிதிஏற்பாடு கிடைக்காமையின் காரணமாக புள்ளி விபரங்களை எதிர்பார்க்கப்பட்ட பிரகாரம் மேற்கொள்ள முடியாதிருந்தமையும் 2022 ஆம் ஆண்டின் போது பாதீட்டு | எதிர்பார்த்த நோக்கங்களை நிறைவேற்றக் கூடிய வகையிலும் ஆக்க பூர்வமானதாகவும் புள்ளி விபர நடவடிக்களை மதிப்பீடு செய்யப்பட்ட பிரகாரம் மேற்கொண்டு பூர்த்தி செய்தல் வேண்டும். |

| | |
|---|---|
| 2017 ஆம் ஆண்டின் போது புள்ளிவிபரங்களை பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. 2018 ஆம் ஆண்டு மற்றும் 2019 ஆம் ஆண்டின் போது இந்த புள்ளிவிபரங்களின் முதலாவது கட்டம் முடிவடைந்திருந்ததுடன், அதற்காக ரூபா 6,133,535 தொகை செலவிடப்பட்டிருந்தது. எனினும், 2020 ஆகஸ்ட் 31 ஆம் திகதி வரையிலும் இரண்டாவது கட்ட நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | மதிப்பீட்டின் மூலம் நிதிஏற்பாட்டை பெற்று அந்த புள்ளிவிபரங்களை பூர்த்த செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது . |

## 4. நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்ளல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2030 இன் நிகழ்ச்சி நிரலின் பிரகாரம் 2030 ஆம் ஆண்டளவில் சுயதொழில் வாய்ப்பு மற்றும் தொழில் முயற்சிகளுக்காக தொழில்நுட்ப மற்றும் தொழில்சார் தகைமைகளை பெற்றிருக்கின்ற இளைஞர் மற்றும் முதியோர்கள் 5,000 பேருக்கு NVQ மட்டம் 4 இனை வழங்கும் நோக்கத்திற்காக திணைக்களம் இனங்காணப்பட்டிருந்தது. எனினும், மீளாய்வாண்டின் போது நடாத்தப்பட்ட 14 பயிற்சி பாடசாலைகளில் ஒட்டுமொத்த இயலளவும் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமை, பயிலுனர்களினால் களப்பரிசோதனைகளில் இருத்தல் தொடர்பாக பின்தொடர் | ஒரு குழுவொன்றிக்காக NVQ III மட்டத்தில் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது. மிகுதி 13 பாடசாலைகளுக்காக இந்த சான்றிதழை வழங்கும் செயற்பாடுகள் அமுல்படுத்தப்படுகின்றது. | இனங்காணப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நடவடிக்கைககள் மேற்கொள்ளப்படாமை மற்றும் தொழில்சார் ரீதியாக ஏற்றுக் கொள்ளப்பட்ட சான்றிதழ் பத்திர (NVQ) பாடநெறி மாத்திரம் இனங்காணப்பட்டமை போன்ற விடயங்ளுக்காக தீர்வுகள் பெறப்பட்டிருக்கவில்லை. அதனால் எதிர்பாத்த நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு வசதியீனம் ஏற்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | | |
| (ஆ) | கை இயந்திர புடவைக் கைத்தொழில் துறையில் பங்களிப்பினை உயர்வடையச் செய்வதன் மூலம் கைத்தொழில் பிரிவில் அண்ணளவாக தேசிய உற்பத்திற்கு பங்களிக்கின்ற காண்பிக்கப்படுகின்ற பங்களிப்பு 10 சதவீதத்தை ஏற்படுத்துதல் இன்னுமொரு நோக்கமாக இருந்தது. அதற்காக புடவைக் கைத்தொழில் கிராமங்களை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்ட போதும், இது வரை ஸ்தாபிக்கப்பட்டுள்ள கிராமங்களின் துறைகளுக்கான பங்களிப்பு, அவற்றின் தற்போதைய நிலைமை மற்றும் மீளர்வாண்டில் திட்டமிடப்பட்ட 10 கிராமங்கள் ஆரம்பிக்க முடியாமை போன்ற காரணங்களினால் எதிர்பார்த்த நோக்கங்களை அடைவதற்குள்ள இயலுமை தொடர்பாக கவனம் செலுத்த | புடவைக் கைத்தொழில் கிராமங்களை ஆரம்பித்தல் கைஇயந்திரங்களை வழங்குவதற்கு முடியாமை போன்றவற்றுடன் கொவிட் சிக்கலான நிலைமையினால் மேற்கொள்ள முடியாதிருந்தது. | எதிர்பார்த்த நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வேண்டியிருந்தமை அவதானிக்கப்பட்டது. | | |
| (இ) | இனங்காணப்பட்ட நோக்கங்களை அடைந்து கொள்ளும் செயல்முன்னேற்றத்தை அளவிடுவதற்கான அடிப்படை ஆண்டு மற்றும் அந்த ஆண்டில் காணப்பட்ட நிலைமையை அடிப்படை தரவாக இனங்காணப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு மேற்கொள்ளாமல் மீளாய்வாண்டில் பெறப்பட்ட செயல்முன்னேற்றம் 0 வீதத்திற்கும் 49 சதவீத்திற்கும் இடையிலான வீச்சினைக் கொண்டிருந்ததாக வருடாந்த செயலாற்றல் அறிக்கையில் காண்பிக்கப்பட்டமையினால் அந்த செயல்முன்னேற்றத்தின் சரியான தன்மையை உறுதிப்படுத்த முடியாதிருந்தது. | இனங்காணப்பட்ட நோக்கங்களின் செயல்முன்னேற்றங்களை அளவிடுவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கைகள் எடுக்கப்படும். | நோக்கங்களின் செயல்முன்னேற்றத்தை அளவிடுதவற்கு அடிப்படை ஆண்டு மற்றும் அந்த ஆண்டில் காணப்பட்ட நிலைமை அடிப்படையாக கொள்ளப்பட வேண்டும். |

**5. நல்லாளுகை**

**5.1 பொது மக்களுக்கு சேவையினை நிறைவேற்றுதல்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2008 பெப்ரவரி 06 ஆம் திகதிய 05/2008 மற்றும் 05/2008(i) ஆம் இலக்க அரச நிர்வாக சுற்றறக்கையின் பிரகாரம் பிரஜைகள்/ சேவை பெறுனர்கள் விஞ்ஞாபனம் அங்கீகரிக்கப்பட்டு அமுல்படுத்துதல் மற்றும் உரிய நடவடிக்கைகளை மதிப்பிடுவதற்கு திணைக்களத்தினால் திட்ட | பிரஜைகள்/ சேவைபெறுனர்கள் விஞ்ஞாபனத்தை தயாரிப்பதற்கான தகவல்களை சேகரித்தல் மற்றும் அவற்றை மீளாய்வு செய்யும் நடவடிக்கைகள் தற்போது | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்கயிருத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| முறைமையொன்று தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | |

**5.2 உள்ளகக் கணக்காய்வு**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 40(1) பிரிவின் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரினால் உள்ளக கணக்காய்வாளர் ஒருவர் நியமிக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டில் அந்த பதவி மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. மேலும் 2020 ஆம் ஆண்டிற்காக 02 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டியிருந்த போதிலும், ஒரு கூட்டத் தடவை மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தது. | பதவியணியினரில் உள்ளக கணக்காய்வாளர் பதவி அங்கீகரிக்கப்படாதிருந்ததுடன், அதனை அங்கீகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பொருத்தமான உத்தியோகத்தரை கோரி அரசாங்க சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சுக்கு கோரிக்கை விடப்பட்டுள்ளது. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 40(1) மற்றும் (2) பிரிவுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**6. மனித வள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இரண்டாம் மற்றும் ஆரம்ப நிலைகளில் காணப்பட்ட 46 வெற்றிடங்களில் ஆலோசனைச் சேவையின் 15 பதவிகளுக்காக மாத்திரம் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட்ட போதிலும், வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | புடவைக் கைத்தொழில் ஆலோசனையாளர் பதவிக்கு புதிய உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பதற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினதும் மற்றும் உரிய இராஜாங்க அமைச்சினதும் அங்கீகாரத்தைக் கோரியிருந்ததுடன், உத்தியோகத்தர்களை | அங்கீகரிக்கப்பட்ட பதவிகளின் வெற்றிடங்களை நிரப்புவதற்கோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட பதவி எண்ணிக்கையினை மீளாய்வு செய்து திருத்துவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

சேர்த்தல் தற்காலிகமாக நிறுத்தி வைப்பதற்கு நிதி அமைச்சு எடுத்த தீர்மானத்தின் காரணமாக அங்கீகாரத்தை பெறுதல் தாமதமாகியிருந்தது.
பின்னர் வெற்றிடமான 15 பதவிகளுக்காக சேர்க்கப்பட்டிருந்ததுடன், ஏனைய பதவிகளுக்காக உரிய நிறுவனங்களுக்கு கோரிக்கை விடப்பட்டுள்ளது,